ஆதாரக்கல்வி

கல்வி 7 ஆகஸ்டு 1954 கலைகள் 3 & 4

பொருளடக்கம்

		பக்கம்
1.	பாராட்டத்தக்கதே —தலையங்கம்	1
2.	தமிழுக்கு போட்டியாக ஹிந்தி வரவில்லை —டாக்டர் ரகுவீரர்	2
3.	வீண் குழப்பம் ஏன்?	5
4.	ஆசிரியர் நிலையை உயர்த்த வழிகள்	6
5.	காங்கிரஸ் காரர்களுக்கு காரிய கமிட்டி ஆக்ஞாபத்திரம்	7
6.	இலட்சிய இன்பம் —சிவ சக்தி	8
7.	வீரப்புதல்வன் —சி. பி. ராயன்	9
8.	இந்து சேவா சங்கம் —M. ஜெயா	12
9.	உபநிஷதச் சிறு கதைகள் —ஆசி	14
10.	ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சி பள்ளி —காந்தாமணி	17
11.	ஒவ்வொரு தாலுகாவிலும் ஹரிஜன ஹாஸ்டல்கள்	18
12.	ஆசிரியர்களுக்கு நில மான்யம்	19
13.	திருவாசகமும் தெய்வத் தெளிவும் —புலவர் - முருகவேள்	21
14.	அனைவருக்கும் உதவுக அட்டை	2
15.	வாத்தியாரை அடித்ததாக கவுன்சிலருக்கு அபராதம் அட்டை	3

★ ஆண்டு சந்தா 3-0-0 ★

★ தனிப் பிரதி 0-4-0 ★

ஆதாரக்கல்வி காரியாலயம்
நெ. 87, ஆச்சாரப்பன் தெருவு,
சென்னை-1.

அனைவருக்கும் உதவுக

ஆருக்குஞ் செய்யுப காரம்—பல
ஊருக்கும் நல்லவட் குண்டோ விகாரம்—மதி
ஈயும் பிச்சையைத் தடுக்காதே—உன்னைப்
பேயென்றொருவர் சொல்லப் பேரெடுக்காதே—மதி
துக்க முள்ளோரை நீ தேற்று—வரும்
அக்குருடர் முடவர் பசியை நீ யாற்று—மதி
தாய்போ லெளியரைத் தாங்கு—வெறும்
வாயுற வும்மன வைரமும் நீங்கு—மதி
பிணியுடை யோரை நீ தேடு—கட்டத்
துணியுடன் காய்கறி சோறு நீ போடு—மதி
பாத்திர மறிந்திடு பிட்சை—தப்புத்
தோத்திரஞ் செய்வோரை துரத்துதல் சிட்சை—மதி
புத்தியில் லார்க்கு நீ போதி—தெய்வ
பத்தியில் லார்க்கு நீ படிப்பித்தல் நீதி—மதி
நன்மையின்றிக் குறை யேது பெருந்
தின்மை செய் தோர்க்கும் நீ செப்பாதே தீது—மதி
பூமியி லேழைபோல் வேடம்—கொண்டு
சாமியே வருவர் நீ தள்ளுதல் தோட்டம்—மதி
நரக மோட்சங் கொண்டு வருவார்—தீனர்
தருவோர்க் கொன்றீவார் தரார்க் கொன்று தருவார்—மதி
பல்வகை ஏழைகள் - நிமித்தம்—அத்தன்
செல்வரை படைத்தனன் செகத்தில் ப்ரசித்தம்—மதி
யாசகர்களை யுப சரியே—சுவர்க்க
வாசலில் தொண்டைமானுந் தோட்டியுஞ்சரியே—
மதியிது மதியிது பெண்ணே—புண்ய
வழியல்ல வோநல்ல மகராசி கண்ணே.

நன்றிக்கடிதம்

அன்பு - வீ. வே. முருகேச பாகவதர்

எங்குநிறைந் தொளிர்கின்ற இயற்கைத்தாய் அருளாலும் ஈகைத்தோய்ந்த
உங்களருந் தயவாலும், என்செல்வித் தமிழரசி ஓதித் தேர்ந்து,
இங்குசென்னை நகரசவைப் பள்ளியிலா சிரியைத்தொழில் இனிதேபெற்றாள்!
மங்களமே உருவான சர்மாநும் அன்புக்கென் வாழ்த்து! நன்றி!!

ஆதாரக்கல்வி

ஆசிரியர்: அ. கி. சு. சர்மா

கல்வி 7 | ஜய, ஆடி—ஆகஸ்டு 1954 | கலைகள் 3 & 4

பாராட்டத்தக்கதே

நமது மாகாணத்தில், சில மாதங்களுக்குள், 1000 பேருக்குமேல் ஜனத்தொகை கொண்ட 1250 பள்ளிகளில்லா கிராமங்களில், 1250 ஒற்றையாசிரியர் ஆரம்பப்பள்ளிகள் தொடங்கப்படும். அப்படித் தொடங்கப்படுகின்ற புதிய பள்ளிகளின் தொகை 1250-ஐ விடக் குறைவாக இருந்தால், இப்படிக் குறையும் எண்ணிக்கைக் கேற்ற பள்ளிகள், 500-க்கு மேல் ஜனத்தொகை கொண்ட கிராமங்களில் ஏற்படுத்தப்படும்.

இப் பள்ளிகளுக்கான செலவுத் தொகையில், 100-க்கு 75 பங்கை முதல் ஆண்டிலும், 50 பங்கை இரண்டாவதாண்டிலும், மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். நான்காவது ஆண்டிலிருந்து இப் பள்ளிகளுக்கான முழுச் செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும். பிறகு, இத்தகைய பள்ளிகளை ஜில்லா போர்டின் அதிகாரத்திற்கு உட்பட்டனவாக ஆக்கப்படும்.

பள்ளிகள் இல்லாமலிருக்கின்ற 1250 கிராமங்களில், இப் புதிய திட்டத்தின் பயனாக, புதிய பள்ளிகள் ஏற்படுவதால், 1250 ஆசிரியர்களுக்கு வேலைக்கிடைக்கிறது. ஆரம்பக்கல்வி இலாகா மாகாண ஆட்சிக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிற இலாகாவாக இருந்தாலும், நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாத இலாகா அது என்கிற காரணத்தால், ஆரம்பக்கல்வியை வளர்ப்பதற்கான செலவில் ஒரு பகுதியை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டதை மிகவும் பாராட்டுகிறோம்.

இப் புதிய திட்டத்தின் பயனாக ஏற்படும் பள்ளிகள் ஆதாரப் பள்ளிகளாக இருக்கவேண்டுமென்பதே நமது அவா. சென்னை சர்க்கார் கல்வி அமைச்சர் இதற்கு ஆவன செய்வாராக.

தமிழுக்கு போட்டியாக ஹிந்தி வரவில்லை

டாக்டர் ரகுவீர் விளக்கம்

'ஆங்கில மொழி இந்நாட்டின் பொது மொழியாக இருக்கமுடியாது. குறிப்பிட்ட காலத்துக்குள் அது மறைய வேண்டும். ராஜ்யங்கள் தங்களுக்கு இஷ்டமான மொழியில் நிர்வாகத்தை நடத்திக் கொள்ளலாம். ஹிந்தியை தமிழுக்குப் போட்டியாக அல்லது தமிழுக்குப் பதிலாக புகுத்தும் எண்ணம் இல்லை' என்று டில்லி ராஜாங்க சபை மெம்பரும், இந்திய கலாசார சர்வதேச கழகத்தின் டைரக்டருமான டாக்டர் ரகுவீர் பத்திரிகா நிருபர்கள் மகாநாட்டில் கூறினார்.

'தமிழ் பாஷை தொன்மை வாய்ந்தது. தமிழன் இதனால் பெருமை கொள்ள முடியும். இந்தியன் என்ற முறையில் நாங்களும் அதில் பெருமை கொள்கிறோம். ஹிந்திக்கும் தமிழுக்கும் போட்டி கிடையாது. இரண்டும் ஒருங்கே வளரமுடியும்' என்று அவர் கூறினார்.

அவர் கூறியதாவது:—

இந்தியா பல மொழி பேசப்படும் நாடு. இது சரித்திர பூர்வமான விஷயம். இந்திய குடியரசுச் சட்டம் பதின்மூன்று மொழிகளை அங்கீகரித்துள்ளது. இதில் கருத்து வேற்றுமை கிடையாது. எல்லா இந்திய மொழிகளும், தன்னந்தனியாக அந்தந்த ராஜ்ய நிர்வாக மொழியாகவும், பாட போதனை மொழியாகவும், வாணிப மொழியாகவும் இயங்கும் தன்மையை கொண்டுள்ளன. சமஸ்கிருதம் ஒரு பேசும் மொழியாக இல்லாவிடினும், பல்வேறு இந்திய மொழிகளுக்கு ஆணிவேராக இருந்து வருகிறது. காஷ்மீரில் காஷ்மீரி மக்களின் பாஷையாக இருந்த போதிலும், அங்குள்ள அரசாங்கம் ராஜ்ய விவகாரங்கள் சம்மந்தப்பட்ட வரை உருதுவையே மொழியாக கையாண்டு வருகிறது.

அரசியல் சட்டம் உருதுவையும் காஷ்மீரியையும் அங்கீகரித்துள்ளது. பஞ்சாபில் ஹிந்தியும் பஞ்சாபியும் போதனை மொழிகளாக கையாளப்படுகின்றன. மொழி பிரயோகம் சம்மந்தப்பட்ட வரை ராஜ்யங்களுக்கு தனிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் மத்ய அரசாங்கம் எதையும் நிர்ப்பந்திக்க முடியாது.

தமிழ்மொழியின் தொன்மை

சென்னை சம்பந்தப்பட்ட வரை, தமிழ் மொழி புராதனப் பெருமையுடைத்தது. பழங்கால தமிழும் தற்போது பேசப்படும் தமிழும் ஒன்று என்று அர்த்தமில்லை. ஹிந்தி மொழி பல்வேறு உருவங்களில் பேசப்படுகிறது. சமீப காலத்தில் ஹிந்தி மொழி ஒரு குறிப்பிட்ட உருவத்தை அடைந்துள்ளது. ஹிமாசலப் பிரதேசம், டில்லி, உத்தரப் பிரதேசம், பீஹார் மத்ய பாரத், ராஜஸ்தான், ஆஜ்மீர், போபால் ஆகிய இடங்களில் ஹிந்தி ஒரு பாஷைதான் பேசப்படும் பிரதேசங்கள். பஞ்சாபில் இரு மொழிகளும் மத்ய பிரதேசத்தில் இரு மொழிகளும், தென்னிந்தியாவில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு பாஷைகளும் உபயோகத்தில் இருக்கின்றன. ராஜ்யங்கள் தவிர, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் ஹிந்தி

பெருவாரியாக பேசப்படுகிறது. இந்தியாவில் இதர எந்த நகரத்தைக் காட்டிலும், கல்கத்தாவில் தான் அதிகப்படியாக ஹிந்தி பேசுபவர்கள் இருக்கிறார்கள். **உலகில் சீன பாஷைக்கும் ஆங்கிலத்திற்கும் அடுத்தபடியான ஸ்தானத்தை வகிப்பது ஹிந்தி மொழியே.**

மொழி சம்பந்தமாக அபிப்பிராய பேதங்களும், போட்டிகளும் சண்டைகளும் உலகில் எல்லா இடங்களிலும் இருந்திருக்கிறது. இந்தியாதேசம் இதற்கு விலக்கு அல்ல. ஹிந்திக்கும் உருதுக்குமிடையே தீவிர சண்டை இருந்தது. இறுதியில் ஹிந்தியே அரசியல் நிர்ணய சபையில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. உருதுவை வன்மையாக ஆதரிக்கும் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் கூட ஹிந்தியையே ஆதரித்தார்.

ஒரு மொழியையே பேசும் ராஜ்யங்கள் தனி ராஜ்யமாக இயங்க வேண்டுமென்ற கோரிக்கை விடுவது முக்கிய பிரச்னையாக இருக்கிறது. ஆந்திரர், மலையாளிகள் கன்னடியர்கள், மஹாராஷ்டிரர்கள் இந்தக் கோரிக்கைகளை வற்புறுத்துகின்றனர். குஜராத்திகள் சம்பந்தப்பட்டவரை, பம்பாய் நகரத்தில் அவர்களுக்கு உரிமை கொள்வது முக்கியமாய் இருப்பதால் தனி குஜராத்தி ராஜயம் ஏற்படுவதை வற்புறுத்த மாட்டார்கள். தமிழ்-ஹிந்தி சர்ச்சையை அறிந்து கொள்ளவே நான் உங்கள் அழகிய நகருக்கு விஜயம் செய்துள்ளேன். தமிழ் மாணவர்கள் மீது ஹிந்தி திணிக்கப்படுவதாகக் கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாகச் சிலர் ஜெயிலுக்குக்கூட அனுப்பப்பட்டதாகக் கேள்வியுற்றேன். வருத்தப்படுகிறேன்.

வீணாக இந்த சர்ச்சை தீவிரம் அடைந்திருக்கிறது. ஹிந்தியும், தமிழும் ஒன்றுக்கொன்று விரோதமல்ல. இரண்டும் ஒருங்கே வளரலாம். ஹிந்தியை இஷ்டபாடமாகவே வைக்க வேண்டும். இஷ்டமானவர்கள் அதைப் படித்துக் கொள்ளலாம். பல மொழியைப் பயிலப் பயில மனிதனின் உள்ளப் பாங்கு விரிவடைகிறது. தமிழ்ப் படிப்பை ஹிந்தி அப்புறப்படுத்தாது. போட்டிக்கு இடமேயில்லை. சென்னை ராஜ்ய சட்ட சபை சென்னை ராஜ்ய நிர்வாக மொழி பற்றி எந்த முடிவு செய்தாலும் அந்த முடிவுப்படி நடக்க உரிமையுண்டு. நாமெல்லோரும் இந்தியர்கள். இந்தியாவில் ஒரு பகுதியைச் சம்பந்தப்பட்ட விஷயம் முழு இந்தியாவுக்கும் பொருத்தமானது. உங்கள் சிறப்பு அல்லது திறமை இந்தியாவின் சிறப்பு. அல்லது திறமையாகும். தேசாபிமானமுள்ள ஒவ்வொருவனுக்கும் இந்த ஒருமையுணர்ச்சி இருக்க வேண்டும். வேற்றுமைகளிடயே ஒற்றுமையைக் காண வேண்டும். வேற்றுமைகள் ஒற்றுமையைக் குலைப்பதற்குப் பதிலாக வலுப்படுத்த வேண்டும்.

இந்திய மொழிகளின் தரம்

இந்திய மொழிகளின் தரத்தை உயர்த்துவதே நான் மேற்கொண்டுள்ள வேலை. ஐரோப்பிய பாஷைகள் அடைந்துள்ள வளர்ச்சியை இந்திய மொழிகள் அடையவில்லை. விஞ்ஞான பதங்களுக்குப் பொதுவான இந்திய மொழிக் கலைச்சொற்கள் இல்லை. இந்தப் பிரச்னை மகத்தான பிரச்னை. நமது குடியரசுச் சட்டம் ஹிந்தி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மற்றும் பல்வேறு இதர மொழிகளிலும் மொழி

பெயர்க்கப்பட்டு வருகிறது. பல் வேறு மொழி வல்லுநர்கள் ஒன்று சேர்ந்து, தீவிர விவாதங்களிடையே சில பொதுவான பதங்களை ஏற் படுத்த முடிந்தது. நிர்ப்பந்தமின்றி இதில் ஒற்றுமை காண வாய்ப் பிருக்கிறது.

சென்னை ராஜ்யத்தில் தமிழ் நிர்வாக மொழியாகவும், சர்வகலா சாலை போதனை மொழியாகவும் இருக்க வேண்டுமென்றால் அதற்கு ஆட்சேபனை எதுவும் கிடையாது. ஆங்கிலத்துக்குப் பதிலாக தமிழ் இருக்கலாமென்றும், மத்திய அர சாங்க பாஷையாக ஹிந்தி இருக்கு மென்றும் கூறினார்.

"தமிழ் நாட்டில் ஆங்கிலம் இருந்த இடத்தில் ஹிந்தி புகுத் தப்பட மாட்டாது. ஆங்கிலம் இருந்த இடத்தில் ஹிந்தி புகுத்தப்பட மாட் டாது. ஆங்கிலம் இருந்த இடத்தில் தமிழைப் புகுத்திக் கொள்ளலாம்" என்று அவர் விளக்கம் கூறினார்.

வட நாட்டினர் தென்னாட்டு மொழி ஏதோவொன்றைக் கட்டாய மாகப் படிக்கும்படி ஏற்பாடு செய் தால்தான் வட இந்தியர் தென்னாட் டின் மீது ஆதிக்கம் செலுத்துகின் றனர் என்ற எண்ணத்தைப்போக்க முடியும் என்று ஒரு நிருபர் எடுத் துக் கூறியதற்கு எதையும் கட் டாயப்படுத்துவது விரும்பத்தக்கதல்ல என்று ஸ்ரீ ரகுவீர் பதிலளித்தார். மொழிப் பிரச்னை அரசியலுடன் கலந்திருக்கிறது, அதைப் பிரிக்க முடி யாது என்பதை எடுத்துக்காட்டிய போது தப்பபிப்ராயங்களை முதலில் போக்க வேண்டும் என்றும், அதன் பின்னர் தான் மொழிப் பிரச்னைக்குப் பரிகாரம் காண முடியுமென்றும் ஸ்ரீ ரகுவீர் பதிலளித்தார்.

ஆங்கில மொழி இந்நாட்டில் இருக்கும் வரை இந்திய மொழிகள் வளர வழியில்லை என்றும், அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட காலத் துக்கும் ஆங்கிலம் இந்த நாட்டை விட்டு நீங்க வேண்டியது அத்தி யாவசியம். என்றும் அவர் கூறினார்.

கிருதயுகம் எழுக மாதோ!

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமைநீதி
கடியொன்றி லெழுந்ததுபார்; குடியரசென்
றுலகறியக் கூறிவிட்டார்;
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போ
தடிமையில்லை அறிக என்றார்
இடிபட்ட சுவர்போலே கலிவீழ்ந்தான்
கிருதயுகம் எழுக மாதோ.

—பாரதி.

வீண் குழப்பம் ஏன்?

தமிழ்நாட்டில் பாஷை பற்றிய சர்ச்சைக்கு அவசியமில்லை. ஆயினும் சிலர் இன்னும் நிலைமையைக் குழப்பி வருகின்றனர். ஆசாபாசங்களைவிட்டு நிதானித்துப் பார்த்தால் இதில் தெளிவு காண்பது சுலபம். டாக்டர் ரகுவீரர் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ள அபிப்பிராயம் நிலைமையை நன்கு விளக்குகிறது. ஹிந்தி தேசிய பாஷையாக அங்கிகரிக்கப் பட்டுவிட்டது. ஹிந்தி ஏன் தேசீய பாஷையாக விருக்கவேண்டுமென்பதற்கு இனி புதிதாக சமாதானம் தேடத் தேவையில்லை. இருப்பினும் அவர் முக்கிய காரணத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார். பத்து ராஜ்யங்கள் போல் தாங்களாக இஷ்டப்பட்டு ஹிந்தியை ஏற்றுக்கொண்டுள்ளன. தவிர பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களிலும் இது சாதாரணமாக பேசும் பாஷையாகவிருக்கிறது. ஆகவே மற்றெந்த பாஷையையும் விட ஹிந்தியைத் தேசிய பாஷையாக ஏற்பது சுலபசாத்தியம். உயர்வு தாழ்வு என்ற புத்தியை இதில் உண்டுபண்ணிக் கொள்வது அனாவசிய வேலை.

ஆனால் ஹிந்தியைக் கற்பதனால் பிரதேச பாஷைக்கு, தென்னிந்தியா சம்பந்தப் பட்டவரையில் தமிழுக்கு, கெடுதி வந்துவிடுமென்பது வெறும் கற்பனை. இரண்டிற்கும் முறண்பாடில்லையென்பதை ஸ்ரீ ரகுவீரா எடுத்துக் காட்டியிருப்பதுடன் தமிழ் வளர்ச்சி இதனால் குன்றுமெனஉறுதி கூறுகிறார். முக்கியமாக பாடபோதனை தாய்ப் பாஷையிலேயே இருக்கவேண்டுமென்பதை அவர் வற்புறுத்தியிருக்கிறார். உயர்தரப் பள்ளிகளில் மாத்திரமல்ல சாத்தியமானால் கலாசாலைகளிலும் தாய் பாஷை மூலமே பாடபோதனை நடத்த வேண்டுமென்பது அவருடைய கருத்து. பள்ளிகளில் தாய்ப் பாஷை மூலமே பாடபோதனை செய்யப்படுமாயின் தமிழ் புறக்கணிக்கப்பட்டு விடுமென்று அஞ்ச சிறிதும் இடமில்லை. இப்போது ஆங்கிலத்திற்கு இருப்பதை விடப் பலமடங்கு அதிகமாக தமிழுக்கு ஆக்கம் ஏற்பட்டுவிடும்.

ஆங்கிலத்திற்கு 15 வருஷமே கெடு வைக்கப்பட்டுள்ளது. அதிலும் நான்கு வருஷங்கள் இப்போது கடந்து விட்டன. ஆங்கிலத்திற்குப் பதில் தேசீய பாஷை அல்லது தாய்ப் பாஷையை உபயோகிக்க தேசமக்கள் எவ்வளவு தூரம் தயாராகியிருக்கிறார்களென்பதையே கவனிக்க வேண்டும். ஆங்கிலத்தை விட்டுவிடுவதென்றால் அதன் ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளும் பாஷை-அது யாதாக விருப்பினும், ஆங்கிலம் போலவே பூர்ண ஆக்கம் பெற்றிருக்க வேண்டும். நவீன விஞ்ஞானம், அரசியல், சட்டம் முதலிய துறைகளில் எல்லாக் கருத்துக்

ஆசிரியர் நிலையை உயர்த்த வழிகள்

த. நா. கா. க. உப கமிட்டி ஆலோசனை

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியால் நியமிக்கப்பட்ட கல்வி உப கமிட்டி மதுரையில் ஜூலை 10, 11உ களில் கூடியது. அங்கத்தினர்கள் ஸ்ரீ சாம்பசிவ ரெட்டியார். எம். எல். ஏ. ஸ்ரீ எம். எஸ். செல்வராஜன் ஸ்ரீ வி, ராஜகோபால அய்யர் ஸ்ரீ வி. பூவராகவ மூர்த்தி ஸ்ரீ வி. நடராஜன் (முன்னாள் பள்ளிக்கூட டிவிஷனல் இன்ஸ்பெக்டர்) ஆகியோர் வந்திருந்தனர்.

ஆசிரியர் ஸ்தாபனங்களின் பல்வேறு கோரிக்கைகள் பற்றி கமிட்டி ஆலோசித்தது. வாழ்க்கைக்கு போதிய அடிப்படை சம்பள நிர்ணய பிரச்னை பரிசீலனை செய்யப்பட்டது. ஆசிரியர்கள் தரத்தை புனர் பயிற்சியால் உயர்த்துவது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க தனியாரைவிட ஸ்தல ஸ்தாபனங்கள் கூட்டுறவு ஸ்தாபனங்கள் பதிவு செய்யப்பட்ட ஆசிரியர் ஸ்தாபனங்கள் ஆகியவற்றிற்கே ஊக்கமளிக்க வேண்டும் என்றும் நிர்வாகிகள் ஆசிரியர்கள் ஒப்பந்தத்தை மாற்றி அமைப்பதவசியமென்றும் சமுதாய நல, கிராமதிருப்பணி திட்ட அதிகாரிகள் மேற்பார்வை வேலைகளுக்கு ஆசிரியர்களை பயன்படுத்தி அவர்களின் அதிக சம்பாத்யத்துக்கு வகை செய்யவேண்டும் என்றும், கௌரவ பதவிகள் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் இன்ஸ்பெக்டர்களாக அதிக ஆசிரியர்கள் பொறுக்கப்பட வேண்டும் என்றும் ஒரு பள்ளியிலிருந்து வேறபள்ளிக்கு மாறும் ஆசிரியருக்கு சம்பள அனுகூலம் தரப்பட வேண்டும் என்றும் கமிட்டி கருதியது.

பிராவிடெண்ட் நிதி-இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஆராயப்பட்டது, பிராவிடெண்ட் நிதிக்கு அதிக வட்டி தரப்பட வேண்டும் என கேட்கப்பட்டது. இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட முடியாத ஆசிரியர்களுக்கு கிராடியுடி அளிக்கும் திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் குழத்தைகளுக்கு பள்ளி சம்பள வஜா அளிக்கவும் சிபார்சு செய்யப்பட்டது.

கிராம ஆசிரியர்கள் நிலையை உயர்த்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. ஒவ்வொரு ஸ்கூலுக்கு அல்லது சில ஸ்கூல்களுக்கு அருகாமையில் உணவு தான்யங்கள் உற்பத்திக்கு ஒரு பண்ணையும், தொழில்கள் ஏற்படுத்தவும், விளைச்சல் உற்பத்தியை ஆசிரியர்களிடையே பங்கிடவும் திட்டமிடப்பட்டது. இதனால் ஆதாரக்கல்வியில் பரீட்சைகள் புரிய தோது ஏற்படும். இது பற்றிய திட்டம் பிறகு உருவாகும்.

களையும் அறவே சந்தேகத்திற்கு இடமின்றி வெளியிட சொற்பெருக்குப் பூரணமாகவிருக்க வேண்டும். தமிழிலேயே பாடபோதனை வேண்டுமென்று ஆசை கொண்டால் மாத்திரம் பயன்படாது. ஆசை கைகூட கிரியாம்சையில் முன்னேற்ற மேற்பட வேண்டும். தமிழபிமானிகள் முதலில் இத்துறையில் கவனஞ் செலுத்துதல் அவசியம். இதுவரை இதற்கு என்ன செய்திருக்கிறார்கள்? உருவான முயற்சி அல்லது திட்டம் எதையும் காணோம். ஆவன செய்ய உத்சாகிகள் முன்வரவேண்டும். சென்னை சர்க்காரும் இதில் தகுந்த கவனஞ்செலுத்துவார்களென எதிர்பார்க்கிறோம்.

(சுதேச மித்திரன்)

காங்கிரஸ்காரர்களுக்கு காரிய கமிட்டி ஆக்ஞாபத்திரம்.

ஆக்க வேலைகளிலும், அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபடும்படி காங்கிரஸ்காரர்களுக்கு இன்று காலை காங்கிரஸ் காரியக் கமிட்டி வேண்டுகோள் விடுத்தது. ஆக்க வேலைத் திட்டங்களும், அபிவிருத்தி நடவடிக்கைகளும் இப்போது அதிகரித்திருப்பதுடன், அதற்கான வாய்ப்பும் விரிவடைந்துள்ளது.

காங்கிரஸ் காரியக் கமிட்டி இத்தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆக்க வேலை திட்டங்களில் காங்கிரஸ்வாதிகள் பலன் தரத்தக்க வகையில் ஈடுபட ஏற்பாடுகளைச் செய்யுமாறு பல்வேறு காங்கிரஸ் கமிட்டிகளின் தலைவர்களுக்கும், பொதுக் காரியதரிசிகளுக்கும் கமிட்டி ஆணை பிறப்பித்திருக்கிறது.

மத்தியிலும், ராஜ்யங்களிலும் இந்தியாவை ஆளும் பொறுப்பையும், பளுவையும் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டதிலிருந்து காங்கிரஸின் சட்ட சபை வேலைத் திட்டங்கள் அவசியமாகவே முக்கியமாகி விட்டன. அவை இடைவிடாமலும், முழு அளவுக்கும் கவனிக்க வேண்டியவையாகும். காங்கிரஸ் என்றைக்குமே ஆக்க வேலைத் திட்டங்களை முக்கியமாகக் கருதி வந்திருக்கிறது. சட்ட சபை வேலைத் திட்டத்தின் வெற்றிக்கு இவை இன்றியமையாதவையாகும் என்பதுடன் அவைகளை பரவலான அளவில் நடத்துவதும் முக்கியமாகும்.

காங்கிரஸின் சக்தி பூராவும் மக்களிடையே உள்ள ஆணிவேரிலிருந்து தழைத்ததாகும். ஆக்க வேலைகள் மூலம் மக்களுக்குப் புரிந்த தொண்டுகளாலும் திரண்டெழுந்தது அந்த பலம். இப்போது அத்தகைய நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. பரந்த வாய்ப்புள்ளவையாக உள்ள நாட்டில் உள்ள எல்லா முன்னேற்ற திட்டங்களும் இதில் அடங்கியுள்ளன.

பார்லிமெண்டிலும், ராஜ்யங்களில் சட்ட சபைகளிலும் இருக்கும் காங்கிரஸ் மெம்பர்கள் தங்கள் தொகுதிகளுடன் இடைவிடாத தொடர்பு கொண்டிருக்க வேண்டும். எல்லா ஆக்க வேலைகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும், பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

"சட்ட சபை வேலையில் நேர்முகமான சம்பந்தமில்லாத காங்கிரஸ்காரர்களுக்கு பிரத்யேகமான பொருப்புண்டு. அவர்கள் இந்த ஆக்க வேலைகளிலும், முன்னேற்ற நடவடிக்கைகளிலும் கலந்துக் கொள்ள வேண்டும். பிரஸ்தாப ஆக்க வேலை திட்டங்களில் பழைய நிர்மாண திட்டங்களான வகுப்பு ஒற்றுமை, ஹரிஜன முன்னேற்றம், பூர்வீகக்குடிகள் அபிவிருத்தி, கிராமக் குடிசைத் தொழில்கள் அபிவிருத்தி முதலியனவும் உண்டு.

பூதான இயக்க வேலை, கூட்டுறவுகளை அமைக்கும் திட்டம் முதலிய வேலைகளிலும் ஈடுபட வேண்டும். ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் எல்லா அபிவிருத்தி வேலைகளிலும் சாத்தியமான உதவி எல்லாம் புரிய வேண்டும். சமுதாய நலத் திட்டங்கள், கிராமநல சேவை (தேசிய விஸ்தரிப்புத் திட்டம்) முதலிய நடவடிக்கைகளில் காங்கிரஸ்காரர்கள் கிரியாம்சத்தில் அக்கறை கொண்டு, அந்நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். இத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட ஆலோசனைக் கமிட்டிகளின் மூலமாக

இலட்சிய இன்பம்

[சிவ சக்தி]

1. பாலோடு தேனைக் கலந்திடில் இன்பம்—நல்ல
பண்ணோடு தமிழைக் கலந்திடில் இன்பம்.
நூலோடு அனுபவம் கலந்திடில் இன்பம்—இளம்
நங்கோடு பதனி கலந்திடில் இன்பம்

2. அன்போடு அறிவு கலந்திடில் இன்பம்—பெரும்
ஆற்றலோ(டு) அடக்கம் கலந்திடில் இன்பம்
நண்போடு நம்பிக்கை கலந்திடில் இன்பம் லய
நடனத்தோ(டு) அழகு கலந்திடில் இன்பம்.

3. பெண்மையோ(டு) இளமை கலந்திடில் இன்பம்—உயர்
பெருமையோ(டு) எளிமை கலந்திடில் இன்பம்.
உண்மையோடு ஒழுக்கம் கலந்திடில் இன்பம் கவின்
ஓவியத் தொடுவர்ணம் கலந்திடில் இன்பம்.

4. காதலும் தியாகமும் கலந்திடில் இன்பம்—செறி
கருத்தோடு நடையும் கலந்திடில் இன்பம்.
சாதலோ(டு) இலட்சியம் கலந்திடில் இன்பம்—தங்கள்
ஜனத்தோடு தலைவர்கள் கலந்திடில் இன்பம்!

5. குழலோடு யாழைக் கலந்திடில் இன்பம்!—குழவிக்
குறும்போடு மழலை கலந்திடில் இன்பம்.
ஒளியோடு விழிகண் கலந்திடில் இன்பம்—பொது
உடமையோடு உரிமையும் கலந்திடில் இன்பம்!

மட்டுமின்றி சமுதாய நலத்திட்டம், கிராம நல திட்டங்களுக்கான கிராமத் தொண்டர்கள், இதரவகை ஊழியர்கள் பயிற்சிக்கான திட்டங்களிலும் சேர முன் வந்து பங்கு கொள்ள வேண்டும்.

இவ்வகையில் நவ இந்தியாவை நிர்மாணிக்கும் பிருமாண்ட திருப்பணியில் காங்கிரஸ்காரர்கள் நேர் முகமாக ஈடுபட்டவர்களாவர். இதன் மூலம் காங்கிரஸ்காரர் மக்களுடன் அதிலும் கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவும், அவர்களுக்கு சேவை புரியவும் வாய்ப்பு உண்டாகும்.

இந்த நிர்மாண, அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அ. இ. கா. க. மிகவும் முக்கியமானதாகக் கருதுகிறது. இதற்கு பலன் தரத்தக்க வகையில் ஏற்பாடு செய்யும்படி எல்லா காங்கிரஸ் கமிட்டிகளின் தலைவர்களையும் பொதுக் காரியதரிசிகளையும் கேட்டுக்கொள்கிறது. பிரதேச காங்கிரஸ் கமிட்டிகளும் இதேபோல செய்ய வேண்டும்.

வீரப்புதல்வன்

சி. பி. ராயன் வள்ளுவர் குருகுலம் தாம்பரம் P. O.

என் மனம் ஒரு நிலையில் இல்லை. என் மனம் துக்க வெள்ளத்தில் மிதக்கிறது. திடீர் மாறுதல்கள்; புயல்கள் கடும் வேகத்தில் வீசுகின்றன. நிம்மதி என்பது என்னைவிட்டு நீங்கி எவ்வளவோ காலம் ஆகிவிட்டது. இவைகள் எனக்கு எவ்வளவோ விஷயங்களைக் கற்பிக்கின்றன. "நீ வாழுமளவும் கற்கிறாய்" என்று ராமகிருஷ்ண பரமஹம்சர் அருளிய வாக்கு உண்மையானது. நம்மைப்போன்ற இளைஞர்களுக்கு நல் வழி காட்டுவார் யாருமில்லை என்பது ஒரு குறை. நமக்கே நல்வழி தோன்றினாலும் உணர்ச்சி வசப்பட்டு அதைக் கை விட்டு விடுகிறோம். இன்று உலகம் பணப் போராட்டத்தில் கதி கலங்கி ஓடுகிறது. நாமோ கண் கலங்கி நிற்கிறோம். ஆற்றோடு போக முடியாமலும் எதிர்த்து நீச்சாடவும் முடியாமலும் இளைஞர்களாகிய நாம் திகைக்கிறோம். ஒளியிழந்த நமது கண்கள் வெறும் வழியை பிதுக்கின்றன. சிந்தை குன்றிச் சோர்வடைந்து நிற்கிறோம். இது நம் நாட்டின் இளைஞர்களின் கதை.

நாளுக்கு நாள் புரட்சி வேகம் எனது நரம்புகளை முறுக்கேற்றித் தசை நார்கள் உறுதியடைந்து வருகின்றது. வீரப்புதல்வனே! நீ கவலைப் படுவதை விட்டுவிட்டு காரியத்தில் கவனம் காட்டு. இதை உனக்கு நான் வற்புறுத்துகிறேன். கவலை கொடிய நோய்; கவலை நெஞ்சை கறையான் போல அரித்து விடும். பாரத நாட்டு வீரப்புதல்வராகிய நாம் கவலைப்படலாமா? நாம் எந்நேரமும் தமிழ்த்தொண்டுக்காக பணிபுரிவோம். பாடு படுவோம்; துன்பத்தை வரவேற்போம். தயக்கம் ஏன்? சாவையும் கூட கட்டி அணைத்துக் கொள்வோம்.

இன்றைய மட்டமான சமுதாய அமைப்பு பணம்—பதவி பொய் இவைகளுக்கு இடம் கொடுக்கிறது. உண்மை, உழைப்பு, அன்பு, பண்பு இவைகளை மிதித்து துவைக்கிறது. அதனாலே உண்மை உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் போது பொய்மை எக்காளம் விட்டு ஊதிக்கொண்டிருக்கிறது. அந்தப் பொய்மை ஒழிந்து உண்மை, உழைப்பு உயரவேண்டுமானால் இளைஞர்களாகிய நாம் ஒன்று திரள வேண்டும். புதிய முன்னணிப்படை யமைத்து பிற்போக்குச் சக்திகளை எதிர்த்து போர் முரசு கொட்டவேண்டும். ஆற்றல் கொண்டு அதை வென்று அழித்து மண்ணோடு மண்ணாக்க வேண்டும்.

தமிழ் நாட்டிற்கு இன்னல்களை இழைக்கும் கும்பலின்

ஆணிவேரையே பிடுங்கி எரிய வேண்டும். நச்சுக்கோப்பையாக உள்ள இந்த உலகத்தை அழகிய மலர் வனமாக மாற்றவேண்டும். இல்லையேல் உழைப்போர் உயிர் வாடவும் துயர்ப்பட்டோர் மீண்டும் துயர் படவும் நிற்பார்கள்.

இன்றைய சமூகத்தில் பணம் படைத்தவர்களின் வாழ்விலே சுக நீர் பாய்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் ஏழை எளியவர்களின் வயிறு வாடி, வதங்கி உலர்ந்துக் கொண்டிருக்கிறது. பெரிய மாளிகையில் இன்ப ஜோதி வீசிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஏழை மண் குடிசையில் இருள் கவ்விக்கொண்டிருக்கின்றது. எழுத படிக்கத் தெரிந்த நாமாவது இதைத் தெரிந்துக் கொள்ள வேண்டாமா? எனக்கு நானே சொல்லிக்கொள்ளும் மந்திரம் "சிந்தனையுள்ள புரட்சிக் காரனயிரு" என்பதுதான். வறட்டு முரட்டுத்தனமும், உறுதியற்ற உள்ளமும் பயனற்றவை.

வீரப்புதல்வனே! உனது உள்ளத்தில் ஒரு வீராவேசம் பிறக்கட்டும். தாழ்ந்த தமிழகத்தை விடுதலை செய்ய வேண்டுமென்ற எண்ணம் உதிக்கட்டும். நிலையற்ற இந்த மனித வாழ்க்கையை சிதறியடிக்காமல் வலிமையுள்ள தோளால் ஞான வாளால் உலகை வென்று கன்னித்தமிழின் காலடியில் நின்று வீர முழக்கம் செய். "இந்த நாட்டில் ஏன் பஞ்சம் வருகிறது தெரியுமா?" என்று விவேகானந்தர் 60 ஆண்டுகட்கு முன் கேள்வி கேட்டார். ஆண்மக்கள் ஆண்மையுள்ளவர் இல்லாத காரணத்தால்" என்று பதில் சொன்னார். பலமே விவேகானந்தரின் மதம். பலமே அவர் காட்டிய கல்வி, பலமே கடவுள். பலமே யாவும். இரண்டொரு நூல்களைப்படித்து விட்டு வாதாடுவதும் மேதை எனக் கருதுவது பேதமை முதல் நாள் விதையை ஊன்றி விட்டு மறுநாளே மரமாகிவிட்டதா என்று பார்க்கும் கயவனைப் போல ஒரே நாளில் நாம் கண்டு விட முடியாது. ஏமாற்றி பெற்று விடக்கூடிய காளி மந்திரமல்ல அது.

உலகை மறந்து, ஊனை மறந்து பல நூல்களைப்படித்து குறிப்பு எடுக்க வேண்டும். உலக வரலாறு தமிழ் இலக்கியங்கள், ஆங்கில நூல்கள் இவற்றை ஏராளமாக பயில வேண்டும். ஞானி **எமர்ஸன்** கூறியது போல ஜூலியஸ் சீசரின்கையும்,பிளேட்டோவின் மூளையும், ஷேக்ஸ்பியரின் சிருஷ்டித் தன்மையும், படைத்தவன் நான் என்ற நிலைமைக்கு ஒவ்வொரு தமிழ் வீரப்புதல்வனும் வர வேண்டும்.

வீரப்புதல்வனே! எச்சரிக்கிறேன். வாழ்வைப் பாழாக்கி விடாதே: தைரியத்தோடு புரட்சிக் காரனாக மாறி உடம்போடு உடம்பாய்; உயிரோடு உயிராய் இலக்ஷியத்தை கை விடாமல் உறுதியாய் நில். பிறர் என்ன பிதற்றுகிறார்கள் என்று திரும்பிப் பாராமல் துணிந்துச்செல். "வெற்றி செயலுக்குண்டு விதியின் நியமம்" என்றார் **பாரதியார்.** கடிவாளத்தைக் கையிலேந்திக் கொண்டு மனக் குதிரையை

அறிவு, அன்பு, அறம், அஹிம்சை என்ற துறையை நோக்கிச் செல். இருள், பனி, வெயில், மழை இவற்றை மறந்துவிடு. தமிழ்த் தாயின் பெருமையை கடல் சூழும் உலகமெல்லாம் பரவும் படிச் செய்வது உன் கடமை யல்லவா? உலகாண்ட உயரிய தமிழர்களை அறியாமை இருளில், வறுமைச் சுழலில் வாடித் துயருவதைத் தகர்க்க வேண்டியது உன் கடமையல்லவா? இன்று தமிழ் நாட்டின் நிலைமை என்ன? வடக்கே போனால் வடுவர்; தெற்கே வந்தால் மலையாளர் மேற்கே திரும்பினால் கன்னடர்; கிழக்கே பார்த்தால் துறை முகங்களில் பிரெஞ்சுக் காரர்களின் ஆணவத் திமிரின் ஆதிக்கம்; இப்படி நாற்புறமும் தமிழ்நாடு சிறைப்பட்டுக் கிடக்கிறது.

அல்லி என்ற நூலில் திரு. மு. வரதராசனார் 'இளமையோனுக்கு ஏதாவது ஒரு வெறி இருக்கவேண்டும் அரசியல்வெறி, மொழி வெறி, கட்சி வெறி, ஏதாவது ஒன்று இல்லையேல் காம வெறியே தலையெடுத்து இளைஞனை தலை கீழாக்கிவிடும்" என்று அழகாக கூறுகிறார். ஆகவே வீரப்புதல்வனே உனக்கு தமிழ் வெறி பிடிக்கவேண்டும். உலகத்தில் யாருக்கும் தாழ்வில்லாத தமிழ் இனம் நமது; உலகத்தில் மிக மேம் பட்ட தமிழ் இனம் நமது; உழைப்பை உயர்வாகக் கருதும் தமிழ் இனம் நமது; உழைப்பை பொங்கலாக உண்ணும் உன்னதமான கொள்கையுள்ள தமிழ் இன்பம் நமது; நமது தமிழ் இனத்தில் தோன்றும் வறுமையையும் சிறுமையும் விரட்டியடித்து, செந்தமிழ் வெல்க என்ற சிங்க நாதத்துடன் நம் தமிழ் நாட்டின் மேன்மையை உயர்த்த வேண்டும். அதற்கு உனது ஆற்றல் அறிவு, அன்பு, யாவும் வளர்ந்து வைரமாக வேண்டும்.

பர்மாவை பசு நிலமாக்கிய வீரப்புதல்வனே! தென்னாப்பிரிக்காவைச் செழிக்க வைத்த வீரப்புதல்வனே! மலேயா ரப்பர் தோட்டங்களை செழிக்க வைத்த வீரப்புதல்வனே! நீ சீரும் சிறப்பும் பெற்று நீடூழிவாழ்க!

1954-ம் வருஷ எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை
55 சத விகிதத்திற்கு மேல் தேர்வு

ஜூலை 10—1954-ம் வருஷம் மார்ச் மாதத்தில் பெல்லாரி ஜில்லா உட்பட்ட சென்னை ராஜ்யத்தில் நடந்த எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேறியவர்களின் சதவிகிதம் 55·5.

பெல்லாரி ஜில்லாவும் சேர்த்து சென்னை ராஜ்யத்தில் 1954-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு 53,317 மாணவர்கள் பதிவு செய்து கொண்டனர்; இதில் 49026 பேர்கள் பள்ளி மாணவர்கள்; 2,347 பேர்கள் எற்கெனவே பள்ளியில் படித்துப் பரீட்சைக்கு உட்கார்ந்து தனிப்பட்டவர்கள்; 1944 பேர்கள் தனிப்பட்ட உபாத்தியாயர்கள். 767 பள்ளிக்கூடங்கள் பரீக்ஷைக்கு மாணவர்களை அனுப்பின. 340 சென்டர்களில் பரீட்சைகள் நடைபெற்றன. 52,785 மாணவர்கள் பரீக்ஷைக்கு ஆஜரானார்கள்; இதில் 28,328 பேர்கள் பரீட்சையில் தேறினார்கள். சர்வகலாசாலைப் பாடங்கள் எடுத்துக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 51,048.

இந்து சேவா சங்கம்

M. ஜெயா, ஆசிரியை பயிற்சி பள்ளிக்கூடம், அம்பத்தூர்.

பொழுது புலர்ந்துக் கொண்டிருந்தது, சூரியன் கிழக்கே அடிவானத்திலிருந்து தங்கத் தகடென இருளை விலக்கி ஒளியை வீசி உதயமாகிக் கொண்டிருந்தான். ஏரியிலே சூரிய நமஸ்காரத்தின் நிமித்தம் ஸ்நானம் செய்வன போன்று பட்சிகள் கரைந்து கூட்டம் கூட்டமாக நீரில் தன்னுடல்களை நனைத்துச் நனைத்து சிலிர்த்துக்கொண்டன.

ஏரியின் அண்மையில் அமைந்த சேவாசங்கம் என்னும் விளம்பரப்பலகை வேலியின் நடுவே வானவில்லைப்போல் அமைத்துப் பொறிக்கப்பட்டு இருக்கிறது. ஆசிரமத்தைச் சுற்றி "நம் நாட்டுப் போர்வீரர்கள் நாட்டை எப்படி காத்து நிற்பார்களோ" அவ்வண்ணமே வேலியைச் சுற்றி பல மரங்கள் ஓங்கி வளர்ந்து நின்றன. நடுவே கம்பீரத்துடன் ஒரு கட்டடம் அமைந்து பிற நாட்டானிடம் தலைவணங்காத் தமிழனைப்போல் காட்சி அளிக்கின்றது. அக் கட்டிடத்தைக் சுற்றிப் பூச்செடிகள் நம் நாட்டின் சுக க்ஷேமத்தையும், செழிப்பையும் அறிவுறுத்துவனப் போன்று பூத்துக் குலுங்கிப் புதுமணம் வீசி காலை இளந்தென்றலிலே கதிரவனின் இளந்தென்றலிலே புத்துணர்ச்சிக் கொண்டுப் புதுமையுடன் காட்சி அளிக்கின்றன.

ஆசிரமத்திற்கு அருகேயுள்ள தோட்டத்தைக் கவனித்தால் ஹா! கண்குளிர்ந்த பசுமைக் காட்சி, மனதிலே மட்டற்ற மகிழ்ச்சி. ஏன்? பட்டணத்திலே பகட்டான வாழ்க்கையை, படாடோபமான வாழ்க்கையை வாழும் அறிவிற்சிறந்த ஆற்றலிலே மிகுந்த பெரியார்கள், பிரசங்கவாதிகள் பச்சைக் காய்கறிகளைக் கண்டுப் பல ஆண்டுகள் கடத்திக் காய்ந்த காய்கறிகளைக் கணிசமான விலைக் கொடுத்து வாங்கி அரும்பாடுப்பட்டு அருசுவை உண்டியாக்கி உண்டு உருக்குலைந்து வாழும் நிலையினும், இங்கு கண்ணிற்குக் குளிர்ச்சியாகக் காணும்போது, "கடந்த காலங்களில் நம் நாட்டினர் சீர்குலைந்து நின்ற நிலையினும், தற்காலத்து நிலையினும், தவிர்த்து சீரும், சிறப்பும் கொழித்துத் தலைசிறந்த நன்நாடாக புகழின் உச்சாணியிலே புன்னகைப் புரியப்போகின்றது" என்று நம் நாட்டின் நற்செய்தியை மனதிலே ஊட்டி உள்ளத்து உணர்ச்சியைத் தூண்டுவனவாகக் காட்சியளித்தன.

இவ்வண்ணத்திலே ஈடுபட்டு இன்ப உணர்ச்சியிலே மிதக்குங்கால் கண, கணவென "பண்டைக் காலத்திலே பாரத நாட்டின் பழம்பெரும் அரசர்களின் வெற்றி பேரிகைகள் கோட்டை வாயிலில் கொட்டும் பேரிகை

யிலும் மிஞ்சி வீரர்களின் உள்ளத்தெழுச்சிகளை தூண்டும் வகையிலே கேட்கும் வெண்கல மணியோசையை அறிவுறுத்துவனபோன்று" ஆசிரமத்திலிருந்து மணியோசைக் கேட்கின்றது.

தேன் கூட்டிலிருந்து தேனீக்கள் வெளிபடுவதுபோல் ஆ! என்ன? கனவா? நினைவா? காந்தியடிகளின் வழியைப் பின்பற்றிப் பரிசுத்தமுள்ள பிஞ்சு உள்ளங்களைப் படைத்த பிள்ளைகள் தூய வெண்மைக் கதர் அணிந்து "நாட்டிலே அமைதியையும், சாந்தியையும் நிலை நிறுத்திய காந்தியடிகளின் தூதர்களோ என்ற ஐயம் எழுகின்றது. அணிவகுத்து அழகாகக் கட்டிட வாயிலில் கம்பீரமாகக் காணும் நம் நாட்டுக் கொடியின் கீழ் பிள்ளைகள் வந்து அணி அணியாக நின்றார்கள். கொடியேற்றப்பட்டது. ஓ ஹோ! தினமும் இவ்விழா நடைபெறுகின்றதோ?

சுதந்திரமடைந்த மக்கள் நகரத்தில் நாகரீக வாழ்க்கையில் நாட்டங் கொண்டுள்ள இந்நாட்களில் எப்போது நாம் சுதந்திரம் பெற்றோம்! இப்பொழுது யார் ஆட்சி செய்கின்றனர் நம் நாட்டை? முடியாட்சியா? அல்லது குடியாட்சியா? என்று பற்பல சந்தேகங்களை சிற்சில சமயங்களில் மனதில் எழுப்பி அவைகளையும் மறந்து விடுகின்றனரே. அறிவாளிகளே அவ்வாறிருக்க உலக வாழ்க்கையின் ஒரு படியிலே கூட கால் வைக்காத வருங்கால வீரசிகாமணிகளின் கொடியேற்றுவிழா வருங்கால இந்தியாவின் வளமிக்க ஆட்சியை அறிவுறுத்துகிறது. "பாரத தேவியின் மணிக்கொடி பாரீர்" என்று தேசிய கீதம் தெள்ளி மனம் பெற்ற இளங்கன்றுகள் இதயத்திலிருந்து பீரிட்டு வந்து கொண்டிருந்தது.

இக்காட்சியினால் வருங்கால வளம்பெற்ற இந்தியாவின் கற்பனைக் களஞ்சியத்தில் ஊறி மிதக்கும் காலத்தில்............

அவ்வேளையிலே அங்குஒருவர் வருகிறார். ஆ!!! அவர் யார்? நேருவா? அல்லது ஜனாதிபதியா? அவர் வருவதாயிருந்தால் மற்ற மகானுபாவர்கள் இல்லையே!

கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தால்; இப்போது தான் நன்றாக உற்று நோக்கிய பிறகு புலனாயிற்று. ஆம், அவர்தான் இவ்வாஸ்ரமத்தின் நிர்வாகி. காந்தியடிகளின் பொன் மொழிகளைப் போற்றிப் பின்பற்றி சேவை செய்பவர். அன்றொரு நாள் அருமையான நம் அண்ணலின் பொன் மொழிகள் அவர் இதயத்தைத் தாக்கி உள்ளத்து உணர்ச்சியை ஊற்றுப்போல் கிராமத் தியாகம் என்னும் கடலிலே கலந்தது. அதன் எதிரொலியே சென்னை இந்து சேவாசங்கம்.

தம் வாழ்க்கையின் பாதி காலத்தை சேவைக்காக செம்மை

உபநிஷதச் சிறு கதைகள்

(ப்ருஹதாரண்யக உபநிஷதம்)

"ஆசி"

உத்கீத உபாஸனையும் பிராணனின் சிறப்பும்

தேவர், அஸுரர் என்று பிரஜாபதியினிடமிருந்து இரு வகுப்பினர் தோன்றினர். தேவர்கள் மறையொழுக்க நெறியினை விரும்பி நின்று ஒளியுடன் விளங்குவோராயினர்; இவர்கள் சிறுபான்மையினர். அஸுரர்களோ கண்டதைக்கொண்டு களிப்படையும் இயல்பினராகி ஆன்ம அறிவு நாட்டமின்றியவர். இவர்கள் பெரும்பான்மையினர். உலகில் உயர்வு பெறுவதில் இருவகுப்பினரும் முரண்பாடுற்றனர்.

"உத்கீத உபாஸனையால் வேள்வியில் அஸுரர்களைக் கடந்து வெற்றி பெறுவோம்" என்று கூறிக்கொண்டு, தேவர்கள் வாக்கினிடஞ் சென்று "எங்களுக்காக உத்கீத மந்திரங்களை நன்கு கானஞ்செய்து பயனடையச் செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். அவ்வாறே வாக்கும் தேவர்கள் பொருட்டு நன்கு கானஞ்செய்தது. அதன்பயனாக தேவர்கள் நல்லறிவு பெற்றனர். தேவர்களின் வெற்றியைக் காணப் பொறாதவர்களாகி அஸுரர்கள் வாக்கை நோக்கிப்பாய்ந்து அதனைத் தீதுறச் செய்தனர். ஆகவே வாக்கு தீதுற்றதாகி, பொய்யுரைத்தல், தவறாக உச்சரித்தல் போன்ற குற்றங்களைக் கொண்டதாயிற்று.

பின்பு தேவர்கள் மூச்சையணுகித் தமக்கு உதவி புரியுமாறு வேண்டினர். அதனால் அடையவேண்டிய, நன்மணமுள்ளவற்றை முகர்தல் போன்ற பயனை அடைந்தனர். இங்கும் அஸுரர்கள் சென்று தாக்கி, மூச்சேனும் முகர்தலைக்கொண்ட உறுப்பினைத் தீதுறச் செய்தனர். இவர்களின் செயல் ஓங்கி நிற்கையிலேதான், நாசி கெட்ட நாற்றங்களை முகரச் செய்கின்றது.

யான வழிகளிலே திறமையாக செலவிட்டு வாழ்பவர். அதனால்தான் இன்று அநாதையாக அழுதவர்களுக்கு ஆதரவளித்தார். ஆதரவற்றவர்களை அரும் மொழிகள் கூறி அரவணைத்தார். யுத்தத்திலே கைவிடப் பட்ட குழந்தைகளையும் ஆதரித்து வருகிறார். சாதாரண முறையில் அல்ல.

காந்தியடிகள் கொள்கையைக் கடைபிடித்து தம் வாழ்நாட்களை பயன்படுத்தித் தானும் மேன்மையடைந்து நாட்டையும் மேன்மை அடையச் செய்யும் திறமை பெற்றுத்தன் சுய தேவையைப் பூர்த்தி செய்துக் கொண்டு அஹிம்ஸாமுறையிலே நாட்டுப்பற்றுள்ள வீரனாக வாழும் வாய்ப்பு பெறும் பிள்ளைகளாக ஆக்க அரும்பாடு படுகிறார் அப்பெரியார்.

வாழ்க காந்தீயம்!

வளர்க வீரர்கள்!

வாழ்க நிர்வாகி.

இதே போன்று கண், செவி, மனம் இவற்றையும் அஸுரர்கள் தீது றச் செய்தனர். அதன் காரணமாகவே, காணக் கூடாதனவற்றைக் கண் கண்ணுகிறது; கேட்கக் கூடாதனவற்றைச்செவி செவியுறுகின்றது; கருதக் கூடாதனவற்றை மனம் கருதுகின்றது.

அதன் பின்னர், பிராணனைத் தீதுறச்செய்யப் புகுந்ததும், பாறையின் மீது எளியப்பெற்ற மண்கட்டி போன்று அஸுரர் சிதறுண்டனர். பிராண னைத் தீதுறச் செய்ய இயலாததால், பிராணனின் வலிமையைக் கொண்டு தேவர்கள் அறிவுநிலையெனும் தேவநிலையை அடைந்து விளங்குகின்றனர். புலன்களினும் பிராணனே சிறந்தது என்று கண்டனர். இவ்வாறு பிராண னின் உண்மையை அறிவோர் எதிரிகளற்று ஆன்ம நிலையை அடைவர்.

இத்தகைப் பெருமைவாய்ந்த பிராணன் இதுகாறும் எங்கிருந்தது என் பதைத் தேவர்கள் விசாரிக்கத் தொடங்கினர். வாய்க்குள் (ஆயாஸ்யம்) இருந்ததென்று அறிந்தனர். அதனால் பிராணன், 'ஆயாஸ்ய' (அயம்-இது, ஆஸ்யே வாயில் இருந்தது) என்ற பெயரால் வழங்கப்படுகிறது. அங்கங் களின் ஸாரமாக (அவற்றை வினை புரியும் வன்மையுற்றனவாகச் செய்வதால்) 'அங்கிரஸ்' என்றும் வழங்கப்படுகிறது. இந்தப்பிராணன் ம்ருத்யுவுக்கு (அழிவிற்கு)த் தொலையில் இருப்பதால் 'தூர' எனவும் படுகிறது. இவ்வாறு பிராணனின் உண்மையை யறிவோனுக்கு ம்ருத்யு (அழிவு) தொலையில் சென்று விடுகிறது. (அணுகுவதில்லை).

இந்தப் பிராணன், வாக்கு முதலியவற்றின் தீதாகிய (பாபமாகிய) ம்ருத்யுவை ஒழித்துத் திசைகளின் எல்லையை அடையச் செய்து அங்கிருக் கும் தீயோர்களிடத்தில் உறையைச் செய்தது. ஆகவே, ம்ருத்யு தன்னைத் தொடருமென்ற அச்சத்தால் அத்திசைக்கும் ஆங்குள்ள தீதுற்ற மக்களி டத்திற்கும் செல்லக்கூடாது. இவ்வாறு தேவர்களின் தீதுவிலகவே, அவர் கள் ம்ருத்யுவைக்கடந்து தேவ நிலைகளை எய்தினர். வாக்கு அக்னிதேவதையா கவும், மூச்சு, வாயு தேவதையாகவும், கண், ஆதித்ய தேவதையாகவும், செவி திக் தேவதையாகவும், மனம் சந்திரனாகவும் ஆயின.

தனித்தனி உடலைப்பெற்றதும், பிராணன் தனக்கு உணவு வேண்டு மென்று விரும்பிற்று. உண்ணப்படுவனவெல்லாம் பிராணனையே அடை கின்றன. ஆகவே, உணவைக் கொண்டே பிராணன் உடலில் நிலைகொண்டு ளது. வாக்கு, கண் முதலியன, தமக்கும் உணவு வேண்டுமெனக்கோர, தன்னையடையுமாறு பிராணன் அவைகட்குக் கூறிற்று. அவ்வாறே உறுப்புகள் பிராணனைச்சார்ந்தன வாயின. ஆகவே, உண்ணப்படும் உணவு பிராணனின் மூலமாக மற்ற உறுப்புகளையும் திருப்தியுறச் செய்கின்றது.

இவ்வுண்மையை அறிவோன், பிராணன் தன்னைச்சார்ந்த உறுப்பு களைக்காப்பது போன்று, தனது சுற்றத்தாரைக் காக்கின்றான். மற்றவர், அவ்வாறு சுற்றத்தாரைக்காக்க இயலாதவராகின்றனர்.

இந்தப்பிராணன் அங்கங்களுக்கெல்லாம் ரஸமென்றோம். ஒரு அங் கத்தினின்று பிராணன் விலகுமாயின், அந்த அங்கம், சுண்டிப்போகிறது. இந்தப்பிராணன் ப்ருஹஸ்பதி என்ற பெயரால் வழங்கப்படுகிறது. ப்ருஹதீ

என்றால் யாப்பு விசேஷம்; வாக்கு என்றும் பொருள்படும். அதன் பதியாக (தலைவனாக) விளங்குவதால் இப்பெயர் பெற்றது. அன்றி ப்ருஹதீ என்ற சொல் யாப்புகளால் நிறுவப்பெற்ற ரிக்குக்களை (ரிக்வேதத்தை)க் குறிக்கும். ஆகவே ப்ராணன் ரிக்வேதத்தின் அதிபன். இங்கு ப்ராணனென்றது பிராணனின் தலைவனாகிய ஹிரண்ய கர்ப்பனென்ற, உருநிலையைக் குறிக்கும்.

இந்தப் பிராணன் ப்ரஹ்மணஸ்பதி எனவும்படும். பிரம்ம மென்றால் வேள்வியை முக்கியமாகக்கொண்ட யஜுர் வேதமாகும். அதன் பதி (தலைவன்) என்றதால் யஜுர் வேதத்தின் தலைவனும் பிராணனே.

ஸாமவேதமும் பிராணனே. வாக்கு ஸாம மெனப்படும். பெண்பால், ஆண்பால் என்ற இருபாற் சொற்களையும் (ஸா + அம) கொண்டது வாக். பிராணனாலேயே ஸாமம் கானஞ் செய்யக்கூடுமாகலின், ஸாமமும் பிராணனெனப்பட்டது. அன்றி, புழு பூச்சி முதல் யானைபோன்ற விலங்கு, மூவுலகு; அதன் தலைவனாகிய ப்ராஜாபதியீறாகவுள்ள எல்லோரிடத்தும் பிராணன் ஸமமாக இருத்தலின், ஸாமம் எனப்பட்டது.

உயர்த்தி யொலிக்கும் வன்மையைப் பிராணனே தருவதால் உத்கீதம் (உத் = உயர்த்தி, கீதம் = கானம் செய்யப்படுவது) எனவும் படுகிறது.

சைகிதானன் என்பவரது மரபிலுதித்த பிரம்மதத்தரென்பார், பிராணன் மந்திரங்களை வாக்குடன் இணைத்துக்கானஞ்செய்யும் வன்மையைத் தருகின்றதென்பதை உணர்ந்தாரென்ற சான்றும் காணப்படுகிறது. இவ்வாறு அறிவோன், வேள்விகளில் இனிது கானஞ் செய்யும் திறனைப் பெற்றுச் செல்வத்துடன் வாழ்கின்றான்.

நன்றே எல்லாமாகி இருந்தும், 'தீது' என்றது தோன்றி உள்ளத்தே இருவகைப்பண்புகள் இருந்துவருவதையும், உறுதி மனப்பான்மை கொண்டு, நன்றையே நாடி நலம்பெற வேண்டுமென்பதனையும், தேவர், அஸுரர் என்ற இருவகுப்பினராகப் படைப்புத்தலைவன் தோற்றுவித்தான் என்று தொடங்கி பாலர் மனதிலும் படியுமாறு உறுப்புகளினும் பிராணன் சிறந்தது என்றதைச் சிறுகதைபோன்று இவ்வுபநிஷதம் சித்தரித்துள்ளது. இவ்வகையாகப் பிராணனின் உயர்வையும் தீதால் தாக்கப்படாதத் தன்மையையும் அறிந்து உத்கீத உபாஸனை செய்வதால், ஹிரண்யகர்ப்ப நிலையெனும் உருநிலைவரையுள்ள நிலைகள் அடையப்பெறும்.

தீதின் சேர்க்கையுறாமல் அழியாப் பரம்பொருள் நிலையை அடைய வேண்டிக் கீழ்க்கண்ட இறைஞ்சுதலுடன் இந்த உபாஸனை முடிவு பெறுகிறது.

> "தீதினின்று நன்றை அடையச் செய்;
> இருளினின்று ஒளியை அடையச் செய்;
> அழிவினின்று அழியாமையை அடையச் செய்."

ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

அம்பத்தூர் P. O.

அத்தாட்சிப் பத்திரமளிப்பு விழா

காந்தாமணி, பள்ளி நிருபர், அம்பத்தூர் P. O.

25-6-54 அன்று மாலை இரண்டு மணிக்கு அம்பத்தூர் ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சி சாலை பொது மண்டபத்தில், சென்னை காதி ஆபீஸர் ஸ்ரீமான் ஏ. கே. சந்திரசேகர முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் விழா இறை வணக்கத்துடன் துவக்கப்பட்டது. தேநீர் விருந்திற்குப்பிறகு திருமதி மீனாட்சி வெங்கடாசலபதி அம்மாள், தேர்ச்சிபெற்ற மாணவிகளுக்கு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கினார்கள். மேலும் தேர்ச்சி பெற்ற மாணவிகள் ஒவ்வொருவருக்கும் நிர்வாகஸ்தரால் ஒரு திருக்குறள் பதிப்பும் பரிசாக வழங்கப் பட்டது.

பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி சி. தங்கம்மாள் அவர்கள் பள்ளி அறிக்கையைப் படித்தார்கள். ஏனைய பயிற்சிப் பள்ளிகளை விட தேர்வு சங்கியையில் அம்பத்தூர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில் 54 சதவீதம் தேர்ச்சி பெற்றிருப்பது, அதாவது—அனுப்பிவைத்த 79 மாணவிகளில், 43 பேர் வெற்றி பெற்றிருப்பது, மிகவும் பாராட்டத்தக்கது என்று கூறி, இவற்றிற்கு ஆசிரியர்களின் பெருமுயற்சியும், மாணவிகளின் கர்ண சிரத்தையுமே முதன்மையானதென்று கூறினர்.

ஸ்ரீமான் ஏ. கே. சந்திரசேகர முதலியார் தமது தலைமையுரையில், நாடெங்கும் ஆதாரக்கல்வி சாலைதான் பரவவேண்டுமென்றும், இத்தகைய தேசியக்கல்வியினால்தான் எதிர்கால சமூகத்தை, காந்தீய முறையில் உருவாக்க முடியும் என்பதை வற்புறுத்திக்கூறினதுடன், தேர்ச்சி பெற்ற மாணவிகள் பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் பொழுது கதராடையுடுத்தே பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற நியமனத்தை மற்றைய ஆதாரக் கல்விச்சாலை நிர்வாகிகளும் கையாள வேண்டுமென்பதை மிகத்தெளி வாகவும் விரித்தும் எடுத்துரைத்தார்.

பள்ளி நிர்வாகஸ்தரும் ஆதாரக்கல்வி பத்ராதிபருமான ஸ்ரீமான் ஏ.கே எஸ். சர்மாஜி அவர்கள் நகரங்களிலுள்ள பள்ளிகளில் வேலைசெய்யத் தூண்டும் மோகத்தை- ஆர்வத்தை- அறவே ஒழித்து, கிராமீய மக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்தைக் கொண்டு, பள்ளி இல்லா ஊர்களில் ஆதாரக் கல்விப் பள்ளிகளை நிறுவியும், இருக்கும் ஒன்றிரண்டு பள்ளிகளைப் பெரிது படுத்தியும், மற்றும் இதர கல்விச் சாலைகள் சேர்ந்து ஒத்துழைத்தும் ஆதாரக்கல்வி முறையை பயனறிந்து நேர்மையுடன் விஸ்

ஒவ்வொரு தாலூகாவிலும் ஹரிஜன ஹாஸ்டல்கள்

சர்க்கார் யோசிப்பதாக மந்திரி தகவல்

படித்த வேலையில்லாத ஹரிஜனங்கள் புள்ளி விவரம் சேகரிக்க யோசனை

சென்னை ராஜ்யத்தில் ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு ஹரிஜன மாணவர் ஹாஸ்டல் திறப்பதுபற்றிச் சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாக ஹரிஜன நல இலாகா மந்திரி ஸ்ரீ பி. பரமேஸ்வரன் இன்று செய்தி நிருபர்களிடம் தெரிவித்தார்.

மந்திரியின் தலைமையில் 12-7-54 காலை நடைபெற்ற ஹரிஜன அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டி பல சிபார்சுகளைச் செய்தன. இவற்றையும் சர்க்கார் ஆலோசிப்பார்கள்.

படித்த ஹரிஜனங்களிடையே, வேலையில்லாதார் பற்றிய புள்ளி விவரங்களை ஹரிஜன நல இலாகா சேகரிக்க வேண்டுமென்றும், வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தின்வேலை மிக அதிகமாக இருப்பதால் இதைச் செய்யலாமென்றும் கமிட்டி சிபார்சுசெய்தது.

ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட மனைக்கட்டுகள் வேறு சில சில்லரைக் காரணங்கள் காரணமாக அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்றும் ஜாதி ஹிந்துக்களுக்குக் கொடுக்கப்படுவதாயும் புகார் கூறப்பட்டது. இவ்விதம் செய்யக்கூடாது என்றும், ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட மனைக்கட்டுகள் அவர்களுக்கே கொடுக்கப்படவேண்டுமென்றும் கலெக்டர்களுக்கு உத்தரவிட்டிருப்பதாக மந்திரி கூறினர்.

சர்க்கார் நடத்தும் ஹரிஜன ஹாஸ்டல்களில் மாணவர்களுக்கு படிப்புச் சொல்லிக்கொடுக்க கௌரவ ஆசிரியர்கள் நியமிக்க வேண்டுமென்று கமிட்டி சிபார்சு செய்தது.

ஹரிஜன ஹாஸ்டல்கள் இன்னும் சிறப்பாக மேற்பார்வை செய்யப்பட வேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டது.

தரிக்க வேண்டுமென்பதை மிக எளிய நடையில், தெளிவாகப் பசுமரத்தாணிபோல் கூறினது எல்லோரையும் கவருவதொன்றாயிருந்தது.

குமாரி கங்காபாய் வந்தனோபசாரம் கூறி, ஜன கண மன-என்ற தேசிய மங்கள கீதத்துடன் விழாவை இனிதாக முடித்தார்கள்.

ஆசிரியர்களுக்கு நில மான்யம்

பள்ளிக்கூட ஆசிரியர்களின் ஊதியத்தையும், அந்தஸ்தையும் எவ்வாறு உயர்த்துவது? இப் பிரச்னை பற்றி ஆராய்ந்த தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த ஒரு சப் கமிட்டி இதற்குச் சில குறுக்கு வழிகள் இருப்பதாக கூறுகிறது. ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு குறித்த அளவு நிலமும், சில தொழில்களை நடத்துவதற்கான வசதிகளும் அளிக்கலாம்; அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் செலவு போக மிஞ்சுவதை ஆசிரியர்கள் பகிர்ந்து கொள்ளட்டும் என்பது அந்த சப் கமிட்டியின் யோசனைகளில் ஒன்று. இந்த ஏற்பாட்டின் கீழ் ஆதாரக்கல்வி முறையும் சிறக்க நடந்தேறும்; இதே சமயத்தில் விவசாயத்திலும், மற்ற சிறு தொழில்களிலும் புது முறைகள் கையாளப்படுவதன் மூலம் அந்தந்த கிராமம் முழுதும் அனுகூலம் பெறவும் இடமிருக்கிறது என்பது அக்கமிட்டியின் மதிப்பீடு. அது எதிர்பார்ப்பது போல், மேற்குறித்த எல்லா நோக்கங்களும் சிறக்க நடந்தேறுமாயின் அது கண்டு நம்மைவிட அதிகமாக ஆனந்திக்கக் கூடியவர்கள் யாருமில்லை. ஆனால் மனிதனின் இயற்கை குணத்தை மறந்து திட்டம் போடுவதில் பயனில்லை. அக் கமிட்டி எதிர்பார்ப்பது போல் குறை சொல்ல இடமில்லாமல் நடந்து கொள்ள ஆசிரியர் யாரும் இருக்க முடியாதென்று நாம் சொல்லவில்லை. ஆனால் பெரும்பாலோரின் இயற்கையான நடைமுறை யாதாயிருக்கும் என்பதே முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம்.

தங்கள் ஊதியம் பள்ளியைச் சேர்ந்த நிலத்தின் விளைவையும், பள்ளியில் நடக்கும் தொழில்களின் உற்பத்தியையுமே பொருத்ததென ஆசிரியர்கள் எண்ண நேருமாயின் அந்நிலையில் அவர்களது கவனம் முழுதும் எங்கு திரும்பும்? சீரான ஒரு கல்வியை சிறுவர்களுக்குப் புகட்டுவதில் அவர்களுக்குச் சிரத்தை இருக்குமா, அல்லது கூடியவரை அக்குழந்தைகளின் உடலுழைப்பைக் கொண்டு தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதிலேயே ஆசிரியர்களுக்குத் திருஷ்டியிருக்குமா என்ற கேள்விக்கு சாதாரணமாக ஒரே ஒரு விடைதான் சாத்தியம். பள்ளிக்கூடங்களையெல்லாம் இளம் பாலகர்களை வேலை வாங்கும் தொழிற்சாலைகளாக மாற்றிவிடத்தக்க இந்த யோசனையை பெற்றோர் யாரும் வரவேற்பதற்கில்லை.

மேற்குறித்தது போன்ற குறுக்கு வழிகளுக்குப் பதிலாக ஒவ்வொரு கிராமத்திலும் ஆசிரியர்களுக்கென்று நில மான்யம் கொடுக்கும் ஒரு முறையை அமுலுக்குக் கொண்டுவருவது தரமல்லவா என்று அதிகாரிகள் யோசிக்க வேண்டுகிறோம். கிராம

சமுதாயத்துக்கு ஒவ்வொரு வகையிலும் ஊழியம் புரிவோர்க்கு தான்யமாகவோ நிலமாகவோ மான்யம் கொடுப்பது நமக்குப் புதிதல்ல. சமீப காலம் வரை அவ்வேற்பாடு சிறக்க இயங்கி வந்திருக்கிறது. தற்போது ஆசிரியர்களின் காலக்ஷேபத்துக்கு வேண்டியளவு நிலத்தை ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய பொது நிலத்திலிருந்து ஒதுக்கிவைக்கலாம். அது இல்லாத இடங்களில் தனிப்பட்டவர்களிடமிருந்து அந்த அளவு நிலத்தை சர்க்கார் ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டும். பூதான இயக்கமூலம் கிடைத்துள்ள நிலங்களை இத்தகைய நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதோடு சமுதாய க்ஷேமநல திட்டம், தேசிய விஸ்தரிப்பு சேவைத்திட்டம் முதலியவற்றை நிறைவேற்றுவதில் ஆசிரியர்களின் சேவையைக் கூடியவரை பயன்படுத்திக் கொள்வதும் அவர்களது ஊதியம் உயர உதவும். பட்டிணங்களிலுள்ள ஆசிரியர்களைப்பற்றியவரை, அவர்களது ரொக்க ஊதியத்தை ஒரு குறைந்தபட்ச அடிப்படையில் உயர்த்துவதைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

விசேஷ கௌரவம் அல்லது அந்தஸ்துக்கு அறிகுறியாயுள்ள பதவிகளை ஆசிரியர்களுக்கு அளிக்கலாமென்ற மேற்குறித்த சப் கமிட்டி யோசனையை நாம் மனப்பூர்வமாக அங்கீகரிக்கிறோம். இவ்வாறே, தனிப்பட்டவர்களுக்குப் பதிலாக ஸ்தல ஸ்தாபனங்களும், ஆசிரியர்களின் கூட்டுறவுச் சங்கங்களும் புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த ஊக்கமளிக்கப்படவேண்டுமென்ற யோசனையும் நம் ஆதரவுக்கு உரியது. இது வரவர விசேஷமாக அமுலுக்கு வருவது காரணமாக ஆசிரியர்களுக்கு ஸ்திரமான வேலை கிடைப்பதுடன், அவர்களது சம்பளத்தையும், மற்ற சௌகரியங்களையும் கூடிய வரை ஒரே சீராக்குவதற்கான வசதிகள் பெருகுவதும் திண்ணம்.

இலட்சியம் நோக்கி

(சுவாமி விவேகானந்தர்)

விழிகளில் ஒளியே குன்றும்
மேவுதன் நெஞ்சம் சோரும்
அழிவிலா நட்பும் வீழும்
அகண்டபே ரன்பும் தள்ளும்
ஒழிவிலா விதியும் நூறு
கொடுமைகள் அனுப்பும் குழம்பு
எழிலியுன் வழிம றிக்கும்
இயற்கையும் வெறுப்புக் காட்டும்

இத்தனையும் நினை ஒறுத்துத்
தள்ளுதற்கே
என்றாலும் என் உணர்வே
சாக மாட்டாய்
செத்தலிலாத் தெய்வம் நீ—ஏறு ஏறு
சிதறாது இலட்சியத்தை
அடையுதற்கே!

தமிழாக்கம் : சேது இளங்கோ

திருவாசகமும் தெய்வந் தெளிவும்

புலவர் முருகவேள். B. O. L.

தெய்வந் தேளிதற் சிறப்பு :

"தெயவம் தெளிமின் தெளிந் தோர்ப் பேணுமின்" என்பது இளங் கோவடிகள் திருமொழி. "ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு" என்பது பட்டினத்தார் அறிவுரை. "நல்லதன் நலனும் தீய தன் தீமையும் இல்லென்போர்க்கு இனன் ஆகிலியர்" என்பது முதுகண்ணன்சாத்தனர் முதுமொழிக் காஞ்சி. "உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து அலகையா வைக்கப்படும்" என்பது திருவள்ளுவர் தமிழ் மறை. இங்ஙனம் வரும் சான்றோர் அருளுரைகள் பலவற்றாலும் தெய்வந் தெளிவின் சிறப்பும் இன்றியமையாமையும் யாவர்க்கும் புலனாகும். மக்களுள் தக்கோர்களுக்கெல்லாம் அமைந்திருக்க வேண்டிய இன்றியமையாத சிறந்த பண்புகள் பலவற்றில் "குலன் அருள் தெய்வங் கொள்கை மேன்மை" எனத் தெய்வங்கொள்கையாகிய பண்பும் ஒன்றாகப் பெரியோர்களால் சிறப்பாகக் குறிப்பிடப் பெற்றிருத்தல் அறியற் பாலது. எனவே, ஆத்தமானர் அயலவர் கூடி நாத்திகம் பேசி நாத்தழும்பேறினராயினும், நம்மனோர் அனைவரும் அவர் திறம் சாராது "தெய்வம் என்பதோர் சித்தம்" உடையவராக வாழ்க்கை நடத்தும் கடப்பாடுடையமாவோம் !

தெய்வம் தேளிவிக்கும் சில சிந்தனைகள் :

ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும் சிலபல நிகழ்ச்சிகளோ அனுபவங்களோ இன்றியமையாமைகளோ ஏற்பட்டு, எங்ஙனமேனும் இறையுணர்வை எழுப்பியே விடுகின்றன. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பராகியே ஒழிகின்றனர். நிலைபேறுடையன போலத் தோன்றும் பொருள்களெல்லாம் முடிவில் நிலைபேறின்றி அழிந்தொழிந்து போதலை நாம் நாடோறும் கண்டு வருகின்றோம். மனிதனின் செருக்கும் பெருமிதமும் முனைப்பும் நாளடைவில் தேய்ந்து மாய்ந்து போகின்றன. பெருத்த துன்பங்களும் நோய்களும் தொல்லைகளும் நேருங்கால் எல்லாம் மனிதன் தன்னுடைய சிறுமையினை உணரவேண்டியவன் ஆகிறான். எல்லோரையும் அடக்கியாண்டு யாவும் தன்னாலேயே நடப்பனவாகக் கருதித் தருக்கிக் களித்து நிற்கும் கயவனும், தன்கண் நிகழும் காம வெகுளி மயக்கங்களும் பிறவும் தன்னை ஆட்டிப் புடைத்து அலைப்பத்தான் அவற்றிற்கு அடங்கி நின்று, அந்தோ வினையே என்று அழுங்கித் துன்பம் உழக்கின்றான். தன்னுடைய அறிவும் முயற்சியும் பிறவும் ஒரு வரையறைக்குட் பட்டன என்று உணர்கின்றபோது, வரையறைக்குட் படாத அறிவும் ஆற்றலும் இன்பமும் உடைய பொருளின் துணையை அடைய மனிதன் அங்கலாய்க்கின்றான். பரந்துபட்ட இவ்வுலகியல் நிகழ்ச்சிகள் அனைத்தையும் அமைந்திருந்து கருதிக் காணுந்தோறும், இவற்றிற்கெல்லாம் காரணமாக இலங்கும் ஒரு முழுமுதற் பெரும் பொருளின் உண்மையினை நாம் உடன்பட வேண்டியுள்ளது. நாம் நினைப்பது ஒன்றாக இருப்ப நிகழ்வதோ பிறிதொன்றாக உளது. எத்துணை உயர்ந்த இன்பங்களை நுகர்வோனும், இந்நாளில் அவற்றினை வெறுத்தொதுக்கி

இத்தகையதென்று கூற இயலாத
வேறேதோ ஒரு பேரின்பத்தினை
விழைந்து நின்று உள்ளம் அமைதி
யற்று எக்குற்று அல மருகின்றான்.
நமக்குத் துணையென நம்மாற் கருதப்
பெறுபவர்கள் பலரும் நம்மைக்
கைவிட நேர்ந்த நிலையில் "காய்
கதிர்ச் செல்வனே! கள்வனோ என்
கணவன்?" எனக் கண்ணகியார்
அரற்றியதே போல எதோ ஒரு
பெரும் பொருளின் துணை வேண்டி,
வானை நோக்கியே வருந்திக் கதறி
அலறும் நிலையிலுள்ளோம். நாம் செத்
தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை.
சிறு விறகால் தீ மூட்டியே செல்லா
நிற்பர். இவைகளை யெல்லாம் பகுத்
தறிந்தாராய வல்லார்க்கும் தெய்வத்
தெளிவும் கொள்கையும் உண்டாதல்
தேற்றம்!

எத்தகையதாயினும் ஓர் அரசியல்
அமைப்பும், அவ்வரசியல் அமைப்பிற்
குரிய தலைவனும் இல்லாமல், எந்
நாடும், மக்களும் நலமுறத் திகழ்தல்
இல்லை. ஒரு நாட்டிற்கு அரசியலும்
அரசியற்றலைவனும் வேண்டியிருத்
தல் போலவே, இப் பெரிய உலகுக்
கும் ஒழுங்கானதோர் அமைப்பும்,
அவ்வமைப்பினை வகுத்து நடத்தும்
இறைவனும் உளனாதல் வேண்டும்
என்பதில் ஐயமில்லை. காணப்பட்ட
நம்மனோரது உடலின் இயக்கத்திற்
கும் இவ்வுலகின் இயக்கத்திற்கும்
காணப்படாத இறைவன் ஒருவன்
காரணமாவான்!

காணப்படுகின்ற இவ்வுலகம் எப்
போது தோன்றியது? எப்படித்
தோன்றியது? எற்றிற்குத் தோன்றி
யது? எதனினின்றும் தோன்றியது?
இவ்வுலகம் உள்பொருளா? இல்
பொருளா? உள் பொருளாயின்
தோன்ற வேண்டுவது என்னை? இல்
பொருளாயின் உளதாமாறு யாங்ங
னம்? தோன்றியன யாவும் அழிந்து
விடுதலின், இவ்வுலகமும் அழிந்து
படுமோ? அழிந்துபடும் எனின்,
என் அழிதல் வேண்டும்? அழிந்தால்
மீண்டும் தோன்றுமா? தோன்றுங்
காறும் யாண்டு எவ்வாறு இருக்கும்?
என்று இவ்வுலகத்தைப் பற்றியும்—
இவ்வுலகில் வாழும் நாம் யார்?
உடலா? உயிரா? இவ்வுடலும் உயி
ரும் ஒன்றினொன்று முரணி மறு
தலைப் பண்புகள் உடையனவாக
இருப்ப, இவை இரண்டும் தம்முள்
இயைந்தமை யாங்ஙனம்? இயைந்
தமை எற்றிற்கு? எற்றைக்கு?
இயைவித்தவன் யாவன்? இயைந்து
நிற்கும் இவையிரண்டும் இடை நடுவே
பிரிந்து இறந்துபோவதென்னை?
உடலோடே உயிரும் அழிந்தொழி
கின்றதோ? அழிந்திலதேல் பின்
னர் எங்கு எவ்வாறு உளது? என்று
உயிரியல்புகள் பற்றியும்—உலகினை
யும் நம்மோரனைய உயிர்களையும் காத்
தும் படைத்தும் கரந்தும் விளையாடு
வது எது? இயற்கையே எனின்,
தோன்றலும் அழிதலும் வேறுபாடா
கலின் வேறுபாடாதல் இயற்கை
எனப்படாது; வேறுபடுதலே
இயற்கை எனப்படும் எனின்
வேறுபடுதலாகிய விகாரத்தின்
வேறாக இயற்கை என்பது ஒன்றில்லை
என முடியும்! இயற்கை செயற்கைப்
படும் எனின், செய்வோனை இன்றிச்
செயல் நிகழுமாறு யாங்ஙனம்?
செயல் நிகழ்ச்சிகளெல்லாம் அறிவினா
லேயே யன்றோ நிகழ்கின்றன? இவ்
வுலகியக்கமும் அறிவினாலன்றோ
நிகழ்தல் வேண்டும்? அறிவு என்
பது ஒரு பண்பன்றோ? பண்பெல்லாம்
ஒரு பண்பியை யன்றோ சார்ந்திருக்
கும்? அவ்வறிவுப் பொருள் யாது?
அப்பொருள் உயர்திணையோ அஃறி
ணையோ? ஆணோ பெண்ணோ
அலியோ? அருவோ உருவோ அரு
வுருவோ? அப்பொருள் இவ்வுல

கினைத் தன் பொருட்டுப் படைத்ததோ? பிறர் பொருட்டுப் படைத்ததோ? வீணே படைத்ததோ! என்று கடவுளைப் பற்றியும் எழும் பல திற ஐயங்களின் நீங்கித் தெளிந்து கொள்ளும் விருப்பம் மிக்குச் சிந்தனைகள் செய்ய வல்ல நல்லார்க்குத் தெய்வத் தெளிவு நிகழ்தல் ஒருதலை என்க.

இம்மட்டோ! உலகில் நாடோறும் பகலிரவுகள் மாறி மாறி வருகின்றன! ஆண்டுதோறும் பருவகாலங்கள் வெவ்வேறாகத் தோன்றுகின்றன! வானத்தில் எண்ணிறந்த பல கோடி விண் மீன்களும் கோள்களும் தத்தம் நெறி திறம்பாமல் இயங்கி வருகின்றன! மரம் செடி கொடி புல் பூண்டுமுதலியன ஆங்காங்குள்ள தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்ப வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும் நூறு நூறாயிரம் இயல்புகளும் உடையனவாய் அமைந்து காணப்படுகின்றன. எறும்பு முதல் யானை ஈறாக உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதத்து உயிர்த் தொகுதிகள் பல வகைப் பண்பும் பழக்கமும் உடையனவாக உலகின்கண் தோன்றி ஆங்காங்கு வாழ்ந்து மறைந்து செல்கின்றன.

மிகப் பெரியதாய்ப் பரந்து விளங்கும் இந் நிலவுலகினையும் இதனைச்சூழ்ந்து மும்மடங்கு பெரிதாய்த் திகழும் மாபெருங்கடலினையும், அக் கடலைப் போன்று பல மடங்கு பெரிதாய் விரிந்து திகழ்ந்து விண் மீன்கள் ஒளிரும் வானத்தினையும், அவ்வானத்தை அளாவி உயர்ந் தோங்கி நிற்கும் இமயமும் பொதியமும் போன்ற மலைகளையும், "மாயா இயந்திர தனு" என மெய்கண்ட தேவர் கூறுதற்கு ஏற்ப வியத்தகு நுண்ணிய அரிய எண்ணில் பல் பொறிகளின் தொகுப்பென இயைந்து விளங்கும் நம்மனோர் உடலமைப்பின் அருமைப்பாடுகளையும், இத்துணைப் பெரிய இவ்வுடல் ஒரு காலத்தில் மிகச் சிறியதாய் நெருக்கமுற்றிருக்கும் தாயின் கருப்பையின் கண் பத்துத் திங்கள் காறும் தங்கி வாழ்ந்து வளர்ச்சியுற்ற வரலாறுகளையும், இன்னோரன்ன பலவற்றையும் எண்ணிப் பார்க்குங்கால்,

"கடற்காட்சி, வான்காட்சி கார்வரைசூழ் காட்சி
உடற்காட்சி அவ்வுடல் ஒன்றூல்— படற்காட்சி
உய்த்துய்த் துணர்ந்தக்கண் ஓர் இறைவன் உண்டென்னும்
மெய்த்தண்மை நெஞ்சின் மிகும்"

என்றாற் போல, மக்களாயினார்க் கெல்லாம் அவர் எத்தகையராயினும் இயல்பாகக் கடவுளுணர்ச்சி எழப் பெறுதல் உறுதி. அங்ஙனம் எழப் பெற்றவர்கள் என்னிலும் இனியான் ஒருவன் உளன் எனக் கருதியறிந்து கொள்வதோடு, இவ் இனியான் 'உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறிதலையும், உள்ளத்தே இருந்து உயிர்ப்புளேவந்து கள்ளத்தே நிற்றலையும் கண்டு கொண்டு மகிழ்ந்தின்புறுவர்!

இங்ஙனம் இறைவன் ஒருவன் உண்மையினை அருளினால் ஆகமத்தே அறியலாம், அளவினாலும் தெரியலாம். எனினும் சான்றோர்களின் ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே மருளெலாம் நீங்கக்கண்டு வாழ்தலே நமக்கு மிகப்பெரிதும் எளிய தொன்றாகும். ஆதலின், தொன்று தொட்டு வாழையடி வாழை என வந்துள்ள சான்றோர்கள் பலரும் ஒவ்வோராற்றால் நம்மனோர்க்குத் தெய்வவுண்மை தெளிவிக்க முயன்றுள்ளனர். ஆசிரியர் **தொல்காப்பியனார்** "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்

ரூனும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே" எனக்காஞ்சித் திணையால் உலக நிலையாமை கூறித் தெய்வம் தெளிவித்துள்ளார். **திருவள்ளுவர்** 'எழுத்தெல்லாம் அகர முதல அதுபோல உலகு ஆதி பகவன் முதற்று' எனத் தெய்வமுண்மை தேற்றி 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதனை 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' எனக் கூறுகின்றார். 'ஊழ்வினை உருத்துவந் தூட்டும்' என்று **இளங்கோவடிகள்** இயம்புகின்றார். "நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது திறவோர் காட்சியில் தெளிந்தனம்" எனக் **கணியன் பூங்குன்றனார்** கட்டுரைக்கின்றார். **மெய்கண்டதேவர்**, காணப்பட்ட இவ்வுலகம் அவன் அவள் அது என்னும் பாகுபாடுடையதாயும், பலவேறு வகைத்தாய்ச் சடமாயும் சுட்டியறியப்படுவதாயும் இருத்தலின், தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழில்களை யுடையதாய்ச் செய்வோனை இன்றிச் செய்வினை இல்லை என்னும் அறிவியல் முடிபிற்கு அமையக் கடவுள் ஒருவனை வேண்டி நிற்கும் எனவும், அக்கடவுள் காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டும் எனவும் பிறவாறும் தருக்க நெறி பிறழாது பொருத்தமுறக் காட்டுகின்றார். **இராமலிங்க அடிகள்** "நில்லாத காற்றை நிலையாக் குடத் தடைத்துச் செல்லாது வைக்கின்ற சித்தனெவன்?" என்பார். "தோட்பாரம் காலாட் சுமையாகும் சீவன் ஒன்றிங்கு ஆர்ப்பால் எடுத்தது எவராலே பராபரமே" என்பர் **தாயுமானர்**.

இங்ஙனமே, நம் மாணிக்கவாசகப் பெருமானும் தெய்வ முண்மை தெளிவிக்கும் தமது ஞானச் செய்தியாகத் திருவாசகத்தின் கண் பலப்பல கூறியருளுகின்றார். "அருக்கனில் சோதி அமைத்தோன்–திருத்தகும் மதியில் தண்மை வைத்தோன்-பொயதீர் வானிற் கலப்பு வைத்தோன்-மேதகு காலின் ஊக்கம் கண்டோன் நிழல் திகழ் நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்-வெளிப்பட மண்ணில் திண்மை வைத்தோன்— என்றென்று எனைப் பலகோடி எனைப் பலபிறவும் அனைத்தனைத்து அவ்வயின் அடைந்தோன்" இறைவனே என்று நமக்கு விளக்கி அவ்விறைவனைப் "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி! நீரிடை நான்காய் நிகழ்ந்தாய்ப் போற்றி! தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி! வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி! வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி! எனத் திருவாசகம் போற்றிப் புகழ்கின்றது.

இறைவன் நம்மனோர்க்குச் செய்யும் பல திற அருளுதவிகளையும் **போற்றித் திருவகவ**லின்கண் அழகுற எடுத்துக் கூறித் தெய்வந் தெளிவிக்கின்றார். அப் பகுதியின்கண் நாம் நம் தாயின் கருப்பையில் பத்துத் திங்களாறும் தங்கிக் கிடக்குங்கால் ஒவ்வொரு திங்களிலும் முறை முறையே நமக்கு ஏற்பட இருக்கும் இடுக்கண்களையெல்லாம் வகுத்துரைத் தருளுமாற்றால் தெய்வந் தெளிவித்திருக்கும் சிறப்பு, திருவாசகத்தின் பெருமையினை மலைவிளக்கென விளக்கா நிற்கின்றது.

யானை முதலா எறும்பு ஈறாய
ஊனமில் யோனியின் உள்வினை
பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற்
பிழைத்தும்

வாத்தியாரை அடித்ததாக கவுன்ஸிலருக்கு அபராதம்

சென்னை வழக்கில் மாஜிஸ்டிரேட் தீர்ப்பு

...ரு உபாத்தியாயரை அடித்... ...ஏழுகிணறு டிவிஷன் ...சிலர் ஸ்ரீ ஜி. உமாபதிக்கு ... மாஜிஸ்டிரேட் ஸ்ரீ பி. ...ருஷ்ணன் இன்று ரூ. 201 ...ாதமும், கட்டத் தவறினால் 2... வாரம் சாதாரண சிறை தண்டனையும் விதித்தார்.

வழக்கின் விவரம் வருமாறு: ஜார்ஜ் டவுன் கருப்பண்ணன் தெரு கார்ப்பரேஷன் சிறுவர் பள்ளியில் ஒரு உபாத்தியாயரான சூர்ய நாராயணராவ் நாயுடு ஸ்ரீ உமாபதி மீது ஏப். 15-ந் தேதி அவ்வழக்கை தொடுத்தார். 1953 செப்டம்பர் 16உ பள்ளிக் கூடத்தில் உமாபதி தம்மை அடித்ததாக அவர் புகார் செய்திருந்தார்.

மாஜிஸ்டிரேட் தமது தீர்ப்பில் கூறியதன் கருத்தாவது: 16-9-53

ஒருமதி... தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இரு... விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதிதன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறுதிங்களில் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டு திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்......"

என வரும் திருவாசகப் பகுதி, கருவளர்ச்சி கூறும் முறையினால் இறைவனுண்மை நிறுவித் தெளிவு செய்யுந் திறம் பெரிது; மிகப் பாராட்டி வியக்கற்பாலது. இஞ்ஞான்றைக் கருவளர்ச்சி நூல்கள் (Obstetrics) விரிவாக ஆராய்ந்து கூறும் கருத்துக்களையெல்லாம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டினர் எனக் கருதப்படும் வாதவூரடிகள் திட்பநுட்பம் செறியச் சுருங்கக்கூறி விளங்க வைத்திருப்பது, நினைத்தொறும் வியப்பினை விளைக்க வல்லதாகும். இங்ஙனம் இறைவன் உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து உளம் மன்னிக் கருத்திருத்திக் கருணையினால் நம்மனோரை ஆட்கொண்டு காத்தருளும் தன்மையினைத் திருவாசகம் சிறப்புற விளக்கும் மாட்சியினையே பின்னைச் சான்றோர்கள் பலரும் பாராட்டி மகிழ்ந்தனர் என்பதனைத்

"தாயர்கர்ப்பத் துடனமும் தண்ணீரும் தந்தருளும்
நேயவினை யாரே நினையார் பராபரமே"

என வரும் தாயுமானவர் கண்ணியால் எண்ணியுணரலாம். "காரிட்ட ஆணவக் கருவறையில்" என வரும் அவரது பாடலும் ஈண்டுக் கருதற்பாலது.

இங்ஙனம் நமக்குத் தெய்வமுண்மை தெளிவிக்கும் திருவாசகச் செந்தமிழ் மாமறையினை, நாம் இடையறாது ஓதி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, தெய்வத் திருவருள் பெற்றுய்வோமாக!

—முல்லைக்கோடி.

அன்று பிற்பகல் ஒரு சிறுவனை உபாத்தியாயர் பிரம்பால் அடித்தார். சிறுவனின் உடம்பில் அடி விழுந்த வரிகள் காணப்பட்டன. சிறுவன் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு சென்றபோது தாயிடம் புகார் செய்தான். கார்ப்பரேஷன் கவுன்சிலரான ஸ்ரீ உமாபதியிடம் அது பற்றி அவன் தாயார் புகார்செய்தாள். அந்த வார்டுக்கு உமாபதி கவுன்சிலரல்ல. ஆனால் அச்சிறுவனின் வீட்டுக்கு எதிரில் வசித்து வந்தார். 2-30 மணிக்கு மீண்டும் பள்ளி கூடியபோது அச்சிறுவனுடனும், அவனது தாயாருடனும் உமாபதி பள்ளிக்குச் சென்று வாத்தியாரின் கன்னத்தில்அறைந்ததாகவும், பிறகு பிரம்பால் வாத்தியாரை அடித்ததாகவும் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

சம்பவம் நடந்த தேதி 16-9-53 ஆக இருந்தும் 15-4-54 அன்று புகார் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. எதிரி மீது வழக்கு தொடர தனது மேலதிகாரிகளிடமிருந்து 25-3-54 அன்றுதான் அனுமதி கிடைத்ததாக புகார்தார் தெரிவித்திருக்கிறார். அதற்குப் பின் தேக அசௌக்யமடைந்து விட்டதால் தான் புகார் தாக்கல் செய்வதில் கால தாமதம் ஆகிவிட்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

சிறுவனின் உடம்பிலிருந்த தழும்புகளை அவனது பெற்றோர்கள் தனக்குக் காட்டியதாயும், பெற்றோர்களையும், சிறுவனையும் வாத்தியாரிடம் அழைத்துச் சென்று விசாரித்ததில் தான் அடிக்கவில்லை என்றும் வே[...] பையன் அவனை அடித்தத[...] வாத்தியார் கூறியதாயும் [...] பையனை விசாரித்ததில் ஒ[...] அவன் மறுத்ததாயும் [...]தாச[...] பேரில் உபாத்தியாயர் [...]ன் கேட்டுக் கொண்டதாய[...] தெரிவித்திருக்கிறார்.

"இரு தரப்பு சாட்சிய[...] முரண்பாடு காணப்[...]. சாதாரணமாக புகார் தா[...]கல் செய்வதில் ஏற்பட்டுள்ள 8 மாத காலதாமதம் கவனத்திற்குரியது; என்றாலும் இவ்வழக்கில் சம்பவம் நடந்த தினத்தன்றே தலைமையாசிரியர் தமது மேலதிகாரிகளுக்கு அது பற்[...]ரிப் போர்ட் அனுப்பியிருக்கிறார். தலைமை ஆசிரியர் நல்லவ[...]ன்று எதிரியே கூறியிருக்கிறார்.

எதிரி ஆத்திரப்பட்டு நடந்திருக்கிறார் என்பதும், அந்த ஆத்திரத்தில் வாத்தியாரை அறைந்து, பிறகு சிறுவனை அடித்ததாக வாத்தியார் ஒப்புக்கொண்டபின்தான் ஓரளவுக்கு சாந்தமடைந்தார் என்பதும் தெரிய வருகிறது.

சிறுவனை அடித்ததற்கு வாத்தியார் மீதுதான் முதலில் குற்றம் இருக்கிறது என்றாலும் வேறு வகையில் வாத்தியார் மீது எதிரி நடவடிக்கை எடுத்திருக்கமுடியும் அதைவிட்டு தவறாகவும் ஆத்திரப்பட்டும் வாத்தியாரை அடித்ததற்காக இ. பி. கோ. 352-வது பிரிவின் கீழ் எதிரிக்கு ரூ. 201 அபராதமும் தவறினால் 2 வார சிறை தண்டனையும் விதிக்கிறேன்.

Edited and Published by A. K. S. Sarma, 87, Acharappan St., Madras.
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint Street, Madras-1.